2013 ஏப்ரல் 2]

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தொழில் துறை மானியக் கோரிக்கையின்போது பரங்கிப்பேட்டை, நாகப்பட்டினம் வரையிலே பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலைகள் பல்லாயிரம் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. அதற்காக மத்திய அரசாங்கம் ஒப்புதலும் அளித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதனை அரசு எப்போது துவங்க முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது புதிய காகித ஆலை அமைக்கப்படுமா என்பதற்கான கேள்வி குறித்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெட்ரோலிய தொழிற்சாலை அமைக்கப்படுமா என்று கேள்வி கேட்கிறார்கள். எனவே, இது குறித்து தனிக் கேள்வி போட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

130—

பத்திரப் பதிவுக் கட்டணம்

***4645—திரு. ஆர். சுந்தர்ராஜன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்திரப் பதிவுக் கட்டண வீதத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை மற்றும் அதே நிலையில் முத்திரைத் தீர்வை விதிக்கப்படும் ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை 6

சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் 1–4–2012 முதல் குறைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 5–7–2012 முதல் சொத்தின் மதிப்பு ரூ. 25,000–க்கு உட்பட்ட விற்பனை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாஅவர்களின் அரசால் முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.*

திரு. ஆர். சுந்தர்ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

‘இந்தத் தாய்மேல் ஆணை,
தமிழ்மேல் ஆணை (மேசையைத் தட்டும் ஒலி)

குருடர்கள் கண்ணை அம்மா திறந்து வைப்பார்;
(மேசையைத் தட்டும் ஒலி),

தனியானாலும், தலைபோனாலும்,
தீமைகள் நடப்பதை அம்மா தடுத்து நிறுத்துவார்,
(மேசையைத் தட்டும் ஒலி),

இருட்டினில் வாழும் இதயங்களே
கொஞ்சம் வெளிச்சத்தில் வாருங்கள்;

நல்லவர் உலகம் எப்படி இருக்கும்
என்பதைப் பாருங்கள்;

எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான்
என்பது கேள்வியில்லை–அவன் எப்படி வாழ்ந்தான்
என்பதை உணர்ந்தால்
வாழ்க்கையில் தோல்வியில்லை (மேசையைத் தட்டும் ஒலி)

வாழ்வது ஒரு முறை, வாழ்த்தட்டும் தலைமுறை’

2013 ஏப்ரல் 2]

என்று கூறி, அம்மா, என் தாய்மேல் ஆணை, தமிழ்மேல் ஆணை என்று நன்றி சொல்லி, கேள்விக்கு வந்துவிடுகிறேன்.

பவர் பத்திரப் பதிவுக்கு மருத்துவச் சான்றிதழுடன் ஒரு மாத கால அவகாசம் தற்போது நடைமுறையில் உள்ளது. இதனை இரத்து செய்து பழைய நடைமுறையிலே பவர் பத்திரம் பதிவு செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். கிரயப் பத்திரப் பதிவின்போது முகவரியுடன் கிரயதாரரின் செல்லுலார் தொலைபேசி எண் கோரப்பட்டுள்ளது. இதை இரத்து செய்து முகவரி மட்டும் பதிந்தால் போதும் என்கிற நடைமுறையை ஏற்படுத்த வேண்டும் என்பது பொதுமக்களின் கருத்து. பவர் பத்திரம் மற்றும் விடுதலைப் பத்திரம் போன்றவற்றின் பதிவுக் கட்டணத்தையும், முத்திரைத் தாள் கட்டணத்தையும் குறைக்க அரசு முன்வர வேண்டும். தரகுத் தொழிலை நம்பி தமிழகம் முழுவதும் சுமார் 25 இலட்சம், 30 இலட்சம் பேர் வாழ்கின்றனர். பத்திரம் எழுதுபவர்களுக்கு வழங்கியுள்ள லைசென்ஸ் போன்று தரகுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிலத் தரகு புரோக்கர்களை தமிழகத்தின் அமைப்பு சாராத் தொழிலாளர்கள் வாரியத்தில் சேர்க்க அரசு ஆவன செய்ய வேண்டும். தமிழகத்திலுள்ள ஒருசில ஊர்களில் மார்க்கெட் மதிப்பைவிட கைடுலைன் மதிப்பு அதிகமாக உள்ளது. இவற்றைக் கண்டறிந்து உடனடியாகச் சீர்செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கோருகிறேன்.

தாய்மேல் ஆணை, தமிழ்மேல் ஆணை—அன்னையே—கோரிக்கையைக் கனிவுடன் பார்க்க வேண்டுமென்று சொல்லி விடைபெறுகிறேன், வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரப் பதிவுக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்ற ஒரு கேள்விக்கு, பல கோரிக்கைகளை இங்கே வைத்திருக்கிறார்கள். இருந்தாலும், பவர் பத்திரத்தைப் பொறுத்தவரையிலே, பவர் கொடுத்த நபர் உயிரோடு இருக்கிறாரா என்பதை உறுதி செய்வதற்காக Life Certificate என்ற ஒரு Certificate இப்போது துறையினால் கோரப்படுகிறது. அதற்குக்

காரணம், பல்வேறு இடங்களிலே, அப்படி பவர் கொடுத்த நபர் இறந்துவிட்ட பிறகுகூட, உயிரோடு இருக்கிறார் என்ற அடிப்படையிலே மாற்று நபர்களைக் கொண்டு வந்து, ஆவணப் பதிவுகள் நடைபெறுவதாகத் துறைக்குத் தொடர்ந்து புகார்கள் வருகின்றன. அதனால் பல்வேறு இடங்களிலே பல்வேறு சர்ச்சைகளும் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. அதைக் களைவதற்காக, பவர் கொடுத்த நபர் உயிரோடு இருக்க வேண்டுமென்று இப்போது Life Certificate கோரப்படுகிறது.

அதேபோல, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டப்படி, விற்பனை ஆவணங்கள் மற்றும் அதே நிலையில் முத்திரைத் தீர்வை விதிக்கப்படும் ஆவணங்களுக்கு அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். இதற்கென சொத்தின் சந்தை மதிப்பைக் கணக்கிடுவதற்கு ஏதுவாக அனைத்துப் பதிவு அலுவலகங்களுக்கும் வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. இறுதியாக, 1–8–2007 அன்று பதிவுத் துறையில் வழிகாட்டு மதிப்பு திருத்தப்பட்டது. அதன் பின்னர், சொத்துகளின் சந்தை மதிப்பு பன்மடங்கு உயர்ந்துள்ளதைக் கருத்தில்கொண்டு, வழிகாட்டு மதிப்புகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, திருத்தப்பட்ட புதிய வழிகாட்டி மதிப்பு 1–4–2012 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சொத்துகளின் மதிப்பு உயர்ந்துள்ளதால், சொத்துகளை வாங்கும் பொதுமக்களின் சுமையைக் குறைக்கும் விதமாக, விற்பனை மற்றும் அதே நிலையில் முத்திரைத் தீர்வை விதிக்கப்படும் ஆவணங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை 6 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக 1–4–2012 முதல் குறைக்கப்பட்டது. மேலும், பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை எளிய மக்கள் சொத்துகளை வாங்கும்போது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தும் சுமையைக் குறைக்கும் விதமாக ரூ. 25,000 வரையிலான மதிப்பிலான சொத்துகளுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என ஆணையிடப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.